# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு
# 2018 - 2019
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 11

சுட்டெண்:.............................................................. நேரம்: 180 மணித்துளிகள்

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. சிலப்பதிகார வாழ்த்துப்பாவில் போற்றப்பட்ட இடம்

அ) மதுரை ☐ ஆ) பேரூர் ☐

இ) பூம்புகார் ☐ ஈ) தஞ்சாவூர் ☐

2. மண்ணக மாந்தர்க்கு அணியாய் விளங்கியவர்

அ) ஐயை ☐ ஆ) கண்ணகி ☐

இ) மாதவி ☐ ஈ) மாதரி ☐

3. மலர்க்கை என்பது

அ) உம்மைத்தொகை ☐ ஆ) உவமைத்தொகை ☐

இ) பண்புத்தொகை ☐ ஈ) வினைத்தொகை ☐

4. குறைந்த சொல்லாட்சியுடன் நிறைந்த கருத்தைக் கொண்ட இலக்கியங்கள்

அ) காப்பியங்கள் ☐

ஆ) இறையன்பு இலக்கியங்கள் ☐

இ) இக்காலக் கவிதை இலக்கியங்கள் ☐

ஈ) கழக இலக்கியங்க ☐

5. குழந்தைப் பருவத்திலே ஒருவரது எதிர்காலம் தெரியும். இதனை விளக்கும் பழமொழி

அ) கழுதை அறியுமா கற்பூரவாசனை. ☐

ஆ) விளையும் பயிரை முளையில் தெரியும். ☐

இ) அக்கரைக்கு இக்கரை பச்சை. ☐

ஈ) யானைக்கும் அடி சறுக்கும். ☐

6. ''மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்க'' என்னும் பாடலில் மீன் என்பது

அ) உடு ☐ ஆ) நிலவு ☐

இ) கதிரவன் ☐ ஈ) கயல் ☐

7. பட்டி தொட்டி என்பது

அ) அடுக்குத் தொடர் ☐

ஆ) இணைமொழி ☐

இ) அடுக்கிடுக்குத் தொடர் ☐

ஈ ) இரட்டைக்கிளவி ☐

8. யாழ்நூலகத்தின் முன்றிலில் நிறுவப்பட்ட படிமம்

அ) திருமகள் ☐ ஆ) மலைமகள் ☐

இ) கலைமகள் ☐ ஈ) செல்வமகள் ☐

9. ஈரெழுத்தால் ஆன குற்றியலுகரம்

அ) வன்தொடர் ☐ ஆ) நெடிற்றொடர் ☐

இ) மென்தொடர் ☐ ஈ) உயிர்த்தொடர் ☐

10. ஏழிசைகளில் இடம்பெறாதது

அ) இளி ☐ ஆ) உழை ☐

இ) குரல் ☐ ஈ) கூத்து ☐

11. தெரு + ஓரம் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) தெருவோரம் ☐ ஆ) தெருஓரம் ☐

இ) தெருயோரம் ☐ ஈ) தெருவ்வோரம் ☐

12. நூல் நிலையங்கள் தோற்றம் பெற்ற நூற்றாண்டு

அ) 19ஆம் நூற்றாண்டு ☐

ஆ) 20ஆம் நூற்றாண்டு ☐

இ) 18ஆம் நூற்றாண்டு ☐

ஈ) 21ஆம் நூற்றாண்டு ☐

13. மாற்றான் எனக் கூறப்படுபவன்

அ) நண்பன் ☐ ஆ) சிறுவன் ☐

இ) உறவினன் ☐ ஈ ) பகைவன் ☐

14. மாவீரரின் நினைவுகளை மனத்தில் தோற்றுவிக்கும் கல்

அ) வைரக்கல் ☐ ஆ) நடுகல் ☐

இ சிற்பக்கல் ☐ ஈ) படிக்கல் ☐

15. ‘‘சாம்பல் மேட்டிலிருந்து ஒரு நூலகம்’ என்று நெஞ்சக் குமுறலுடன் எழுதியவர்

அ) எம். ஏ. நுஃமான் ☐ ஆ) ஏ.ஐ. குணதிலக்கா ☐

இ) க.மு. செல்லப்பா ☐ ஈ) எசு.ஆர். இரங்கநாதன் ☐

16. மன்னனால் பட்டம் வழங்கப்பட்டது. இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) 5ஆம் வேற்றுமை ☐ ஆ) 7ஆம் வேற்றுமை ☐

இ) 3ஆம் வேற்றுமை ☐ ஈ) 6ஆம் வேற்றுமை ☐

17. எதை விட்டு விடாமல் கொண்டோடு என்கிறார் கவிஞர் அம்பி

அ) பணத்தை ☐ ஆ) சொத்தை ☐

இ) தாய்மொழியை ☐ ஈ) உறவுகளை ☐

18. வி. பி என்பன ———————— விகுதிகளாகும்.

அ) தன்வினை ☐ ஆ) செய்வினை ☐

இ) செயப்பாட்டுவினை ☐ ஈ) பிறவினை ☐

19. அல்வழித்தொகை

அ) 5 ☐ ஆ) 4 ☐

இ) 6 ☐ ஈ) 3 ☐

20. ''காரிருள் நின்ற கடைநாட் கங்குல்''. இதில் கங்குல் என்பது

அ) இரவு ☐ ஆ) மாலை ☐

இ) காலை ☐ ஈ) பகல் ☐

21. கணிகன் அரசவைக்குள் நுழைந்ததும் வணங்கினான்.
இச்சொல்லியத்தின் தோன்றா உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐

இ) செயப்படுபொருள் ☐ ஈ) அடைமொழி ☐

22. யாழ் நூலகம் திறந்து வைக்கப்பட்ட ஆண்டு

அ) 1958 ☐ ஆ) 1954 ☐

இ) 1959 ☐ ஈ) 1960 ☐

23. வேல்விழி வகுப்பறையில் எழுந்து நின்றாள். இதில் எழுந்து என்பது

அ) பெயரெச்சம் ☐ ஆ) வினையெச்சம் ☐

இ) வினைமுற்று ☐ ஈ) குறிப்புவினை ☐

24. கோட்டையைச் சுற்றி அரணுக்காக அகழப்பட்ட நீர் நிலை

அ) அகழி ☐ ஆ) கிணறு ☐

இ) ஆறு ☐ ஈ) குளம் ☐

25. கண்ணகி கணவனை இழந்தது

அ) சேரநாட்டில் ☐ ஆ) சோழநாட்டில் ☐

இ) பாண்டிய நாட்டில் ☐ ஈ) ஈழநாட்டில் ☐

26. ஒரு செயலைச் செய்யுமாறு பிறரைத் தூண்டுவது

அ) ஏவல் ☐ ஆ) வியங்கோள் ☐

இ) தெரிநிலை ☐ ஈ) எழுவாய் ☐

27. கூடல் நகர் எனக் குறிப்பிடப்படுவது

அ) வஞ்சி ☐ ஆ) மதுரை ☐

இ) பூம்புகார் ☐ ஈ) காவிரிப்பூம் பட்டினம் ☐

28. ''உள்ளம் கோவிலென்றும் அன்பே தெய்வமென்றும்'' கூறியவர்

அ) அம்பி ☐ ஆ) உதயை வீரையன் ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ) இரவி ☐

29. எழுதினான் என்பதன் பிறவினை

அ) எழுதுவித்தான் ☐ ஆ) எழுதுவான் ☐

இ) எழுதுகிறான் ☐ ஈ) எழுது ☐

30. **ஐ** என்ற உயிர் எழுத்தின் இன எழுத்து

அ) ஆ ☐ ஆ) இ ☐

இ) ஒ ☐ ஈ) <u>ஊ</u> ☐

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர் வாழும்பகுதியில் கடுஞ்சமர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சிறுவர், பெண்கள், முதியவர் என்ற வேறுபாடின்றி அனைவரும் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றனர். எறிகணைக் குண்டுகள் தமிழரின் உயிர்களை எடுத்துக் கொண்டிருந்தன. காயமடைந்தவர்கள் நிறைந்து வழிகின்றனர். யாரும்யாருக்கும் உதவமுடியாத பேரவலம். ஓர் இளந்தாய் தனது இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக்கொண்டு திக்குத்திசை தெரியாமல் ஓடிக்கொண்டிருக்கின்றாள். புண்பட்டோரின் கதறல்கள் ஓடிக்கொண்டிருக்கும் மக்களின் இதயங்களைக் கிழிக்கின்றன. சிங்களப்படையினர் காட்டுமிராண்டித்தனமாக மக்களை வேட்டையாடிக் கொண்டிருக்கின்றனர். அத்தாய் அவர்களுக்கு அஞ்சி அடர்ந்த பற்றை ஒன்றினுள் தன் இரு பிள்ளைகளுடன் மறைந்து கொள்கிறாள். அவளோ! பருந்திடமிருந்து குஞ்சுகளைக்காக்கும் கோழிபோலத் தவித்துக் கொண்டிருந்தாள். ஆனால், அக்கொடியவர்களிடமிருந்து அவளது பிள்ளைகளைக் காப்பாற்ற அவளால் முடியவில்லை. அவள் முன்னே பிள்ளைகள் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். அவள் கதறி அழுதாள்; துடித்தாள். கணவனை இழந்த நிலையிலும் கூலி வேலை செய்து வளர்த்த பிள்ளைகளை இழந்த அந்தத் தாய் இன்று முதுமையடைந்து தனிமையில் கதியற்றுப் படுக்கையில் கிடக்கிறாள். கேட்பாரற்று, பார்ப்பாரற்றுக் கிடக்கும் இத்தாயின் நிலைதான் என்னே! கொடுமை!

1. தாய் யாருக்கு அஞ்சி பற்றைக்குள் மறைகின்றாள்?

2. தாய்  பிள்ளைகளை எவ்வாறு வளர்த்தாள்?

3. தாய் பிள்ளைகளைக் காப்பது எதற்கு ஒப்பிடப்படுகிறது?

4. இங்கு குறிப்பிடப்படும் சமர் எங்கே நடைபெறுகிறது?

5. எவை ஓடிக்கொண்டிருக்கும் மக்களின் இதயங்களைக் கிழிக்கின்றன?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ''பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டு தீத்திறத்தவர் பக்கமே சேர்க! இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

_______________________________________________

2. புத்தபெருமானை யார் கொன்றதாகக் கவிஞர் கனவு கண்டார்?

_______________________________________________

_______________________________________________

3. இறைவன் யாருடைய உள்ளங்களில் இருப்பதாக இரவி கூறுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

4. வெள்ளம் வருமன் அணைகட்ட வேண்டும்? என்ற பழமொழியின் கருத்தைத் தருக.

_______________________________________________

_______________________________________________

5. யாழ் நூலகம் எக்கட்டடக்கலையை ஒத்ததாக உள்ளது? இதனை வடிவமைத்தவர் யார்?

_______________________________________________

_______________________________________________

6. கண்ணகியின் சிலம்பிலுள்ள பரல்கள் எவை? யாருடைய சூழ்ச்சியினால் கோவலன் கொல்லப்பட்டான்?

_______________________________________________

_______________________________________________

7. கவிஞர் உதயை வீரையனது கவிதை எதனைச் சாடுகிறது?

_______________________________________________


_______________________________________________

புள்ளிகள் 10

**4. பத்து வரிகளுக்குக் குறையாமல், படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக.**

**அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

அ.



ஆ. நாட்டுக்காய்த் தொண்டு செய்வோம் - நம்

இளையோரே எழுந்து வாரீர்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வினைத்தொகையின் முக்காலப் பெயரெச்சங்களைத் தருக.

| வினைத்தொகை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| ஏவுகணை | | | |
| கடிநாய் | | | |

2. பின்வருவனவற்றின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை எழுதுக.

| | உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| கடலறிவு | | | |
| முல்லைப்பல் | | | |

3. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

இருபெயரொட்டுப்பண்புப்பெயர் :- ______

குற்றியலுகரப் புணர்ச்சி :- ______

அன்மொழித் தொகை :- ______

4. சொற்பொருள் தருக.

ஈனச்செயல் ______ குழவி ______

இருமுதுகுரவர் ______ கொழுநன் ______

ஏவலர் ______ கைம்மை ______

5. மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

கல்லுமுள்ளு :- ______

______

ஈவிரக்கம் :- ______________________________________________

______________________________________________

பதைபதைத்து :- ______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

தமிழ்மொழியிலே உரைநடையும் உரைநடை இலக்கியமும் வளம்பெற்று விளங்கும் காலம் இருபதாம் நூற்றாண்டு எனக் கூறுதல் மிகையாகாது. தமிழ் நாட்டில் ஆங்கிலக்கல்வி வளர்ச்சியடைந்ததன் பயனாகத் தமிழ்மொழி அடைந்த சிறப்புக்களுள் உரைநடை வளர்ச்சியை முதன்மையானதொன்றாகக் கூறலாம். இந்நூற்றாண்டுக்கு முன் வழங்கி வந்த பல்வகைப்பட்ட நடைகளோடு இப்பொழுது வழங்கிவரும் உரைநடையினை ஒப்புநோக்கிப் பார்க்குமிடத்திலேதான் இக்காலத்தில் உரைநடை மிக விரைவாக வளர்ச்சிபெற்று வருதலை நாம் தெளிவாகக் காணலாம். முற்காலத்தைப் பார்க்கிலும் இக்காலத்தில் தமிழுரைநடை முன்னேறிச் செல்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒரு மக்கட் குழுவினர் பேசும் மொழியும் அம்மொழியில் எழும் இலக்கியமும் வளர்ந்து செல்லுதல் பெரும்பாலும் அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திலேயே தங்கி இருக்கின்றது. தமிழ் மக்களுடைய வாழ்க்கைமுறை இக்காலத்தில் விரைவாக மாறிக்கொண்டு செல்வதைப்போல முற்காலங்களில் அது அத்துணை விரைவாக மாற்றம் பெற்றுச் செல்லவில்லை. நாகரிகமுள்ள பிற நாடுகளைப் பின்பற்றி நம்முடைய நாடும் இந்நூற்றாண்டிலே விரைவாக முன்னேறிச் செல்கின்றது. சென்ற ஐம்பதாண்டுகளிலே மக்களுடைய வாழ்க்கை பல துறைகளிலும் முன்னேறியிருப்பதால், அதற்கமையத் தமிழ் இலக்கியமும் தமிழ் உரைநடையும் வளர்ச்சியுற்று வருவதை நாம் காணலாம்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

* இக்காலக்கவிதைகள்
* தமிழரும் நடுகல்வழிபாடும்
* இன அழிப்பும் அதன் விளைவுகளும்

புள்ளிகள் 20